[2018 ஜூன் 1

(அ) காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த நவீன உபகரணங்கள் வழங்குதல், வனத் துறை தலைமை அலுவலகத்திற்கு வேளச்சேரியில் சொந்தக் கட்டடம் மற்றும் சத்தியமங்கலத்தில் அருங்காட்சியகம் மற்றும் பழங்குடியினர் சூழல் கலாச்சார கிராமம் அமைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய வனப் பகுதிகளைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். வன வளத்தை மேம்படுத்துவதிலும், காப்பதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள்.*

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே வனத் துறை குறித்த பின்வரும் அறிவிப்புகளை இந்தப் பேரவையில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்:

1. தமிழ்நாட்டின் இலையுதிர்க் காடுகள் வறட்சியான காலங்களில் காட்டுத் தீயினால் பாதிப்புக்குள்ளாகக் கூடியவை. பெரும்பாலான காட்டுத் தீ நிகழ்வுகள் மனிதத் தவறுகளால் நிகழ்பவை. காட்டுத் தீயினைக் கட்டுப்படுத்த வனத் துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தீயினால் பாதிப்புக்குள்ளாகக்கூடிய காட்டுப் பகுதிகள் பரவலாக உள்ளதால், களத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு காட்டுத் தீயினைக் கட்டுப்படுத்தவும், துரதிருஷ்டவசமாக அத்தீயில் சிக்கிக்கொள்ளும் மக்களை மீட்க சிறப்புப் பயிற்சி மற்றும் அடிப்படை உபகரணங்கள் வழங்கவும் 2 கோடி ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2. தற்போது வனத் துறை தலைமை அலுவலகம் பனகல் மாளிகையில் செயல்பட்டு வருகிறது. அங்குள்ள இடப் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு, வேளச்சேரியில் அமைந்துள்ள வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் வனத் துறை தலைமை அலுவலகக் கட்டடம் 70,000 சதுர அடி பரப்பளவு கொண்ட இரு தொகுதி கட்டடங்களாக 30 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. வனச் சரகங்களுக்கு வழங்கிட 125 புதிய ஜீப்புகள் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2018 ஜூன் 1] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

4. தமிழ்நாட்டில் உள்ள பழங்குடியின மக்களின் கலாச்சாரம் மற்றும் சூழல்-நட்பு வாழ்க்கையை அடையாளம் கண்டு, அவர்களின் கலாச்சார வளமையை மேம்படுத்தவும், இயற்கை-நட்பு வாழ்க்கை முறையைத் தெரியப்படுத்தவும், ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம் புலிகள் காப்பக புற எல்லைப் பகுதியில் அருங்காட்சியகம் மற்றும் பழங்குடியினர் சூழல் கலாச்சார கிராமம் ஒன்று 7 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இது, தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சியை பெரிய அளவில் ஏற்படுத்தும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

(ஆ) பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, திறன் வகுப்பறைகள், ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, மாதிரிப் பள்ளிகள் உருவாக்கம், மாணவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட திறன் அட்டை வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு அளப்பரிய முக்கியத்துவம் அளித்து வந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் அம்மாவின் அரசு தொடர்ந்து ஏழையெளிய மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, பள்ளிக் கல்வித் துறை சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1) பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதி, அனைத்துப் பள்ளிகளிலும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலாக குடிநீர் வசதிகள் தேவைப்படும் 2,448 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 48 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் சுத்தமான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)